# உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்

## வருடாந்த அறிக்கையும் கணக்கும்

# 2016

## உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு

## நோக்குகை

உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு நிதி வசதிகளை அளிக்கும் பிரதான நிதி நிறுவனமாதல்மூலம் இந்த நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

## செயற்பணி

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு அத்தியாவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான நீண்டகால நிதி வசதிகளை வழங்கப்படுவதுடன், நிலைபேறுடனான மற்றும் சுயாதீன நிதி நிறுவனமாதல்

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆணையாளர் சபை | 60 |
| 2. | நோக்குகை, செயற்பணி, நிதியம், தாபித்தல், குறிக்கோள்கள் | 61 |
| 3. | தாபனத் தகவல்கள் | 62 |
| 4. | நிருவாக செயற்பாடு | 63 |
| 5. | நடவடிக்கை மற்றும் நிதிசார் பகுப்பாய்வு | 67 |
| 6. | ஆசியா அபிவிருத்தி வங்கியின் கருத்திட்டங்கள் | 79 |
| 7. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை | 81 |


### நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்


| | | |
|---|---|---|
| 8. | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 83 |
| 9. | இலாப நட்டக் கணக்கு | 98 |
| 10. | ஐந்தொகை | 99 |
| 11. | நிதி ஓட்டக் கூற்று | 101 |
| 12. | கணக்கீட்டு குறிப்புகள் | 103 |
| 13. | கணக்கீட்டு கொள்கைகள் | 111 |

## உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## ஆணையாளர் சபை

**(2016 12.31.திகதியில்)**

**தலைவர்**

01. திரு.எச்.ரீ.கமல் பத்மசிறி – செயலாளர், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

**திறைசேரி பிரதிநிதித்துவம்**

02. திரு.டப்.எம்.எம்.பி.எச்.குணரத்ன- பணிப்பாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

**உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 03 | திரு.ஜே.எம்.ஆர்.பீ.ஜயசிங்க | உள்ளூராட்சி ஆணையாளர் | (வடமேல் மாகாணம்) |
| 04 | திரு.எம்.எஸ்.பிரேமவங்ஸ | பிரதான செயலாளர் | (மத்திய மாகாணம்) |
| 05 | திரு.கே.ஏ.திலகரத்ன | பிரதான செயலாளர் | (வட மத்திய மாகாணம்) |
| 06 | திருமதி.எஸ்.ஜே.எம்.எச்.சீ.சமரகோன் | உள்ளூராட்சி ஆணையாளர் | (மேல் மாகாணம்) |
| 07 | திரு.காமிணி ராஜகருணா | பிரதான செயலாளர் | (ஊவா மாகாணம்) |
| 08 | திரு.எச்.பீ.குலரத்ன | பிரதான செயலாளர் | (சப்ரகமுவா மாகாணம்) |
| 09 | திரு.டி.எம்.எஸ்.அபேகுணரத்ன | பிரதான செயலாளர் | (கிழக்கு மாகாணம்) |
| 10 | திரு.ஏ.பத்திநாதன் | பிரதான செயலாளர் | (வடக்கு மாகாணம்) |
| 11 | திரு.ஆர்.சீ.த சொயிஸா | பிரதான செயலாளர் | (தெற்கு மாகாணம்) |
| 12 | திரு.பீ.ரூபசிங்க | கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட | |
| 13 | திரு.எஸ்.ஏ.அபேசிங்க | கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட | |
| | | | |

# வருடாந்த அறிக்கையும் கணக்கீடும் - 2016

## உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை (உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்)

### நோக்குகை

உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு நிதி வசதிகளை அளிக்கும் பிரதான நிதி நிறுவனமாதல்மூலம் இந்த நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

### செயற்பணி

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு அத்தியாவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான நீண்டகால நிதி வசதிகளை வழங்கப்படுவதுடன், நிலைபேறுடனான மற்றும் சுயாதீன நிதி நிறுவனமாதல்

### குறிக்கோள்கள்

சட்டத்தால் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளவாறு உள்ளூர் அதிகார சபைகள், பொதுசன பயன்பாட்டு சேவைகளை பேணிச்செல்வதற்கு முடியுமானவாறு சலுகை அடிப்படையில் நிதிசார் வசதிகளை அளித்தல் மற்றும் அனுமதி வழங்குதல்.

### நிதியம்

கடன் வழங்குவதற்கு தேவையான நிதியை சலுகை வட்டி சதவீதத்தின் அடிப்படையில் மத்திய அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் நீண்டகால கடன் தொகையாக வழங்கப்படுகிறது. ஆசியா அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1632 SRI (SF) மற்றும் ( 2201 SRI (SF)) சுழற்சி நிதியத்தின் கடன் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் 25 மில்லியன் ரூபா தொகை பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் எதுவித நிதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

## தாபனத் தகவல்கள்

### தாபித்தல்

1916ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், 1930 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க, 1931 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க, 1938 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க, 1942 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டங்கள் மற்றும் 1949 ஆம் ஆண்டு 29ஆம் இலக்க சட்டம், 1974ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டு 24ஆம் இலக்க சட்டம் ஆகிய சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை நியதிச்சட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின்கீழ் இயங்கியதுடன், மீண்டும் 2015 ஆம் ஆண்டில் அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, சனநாயக நிருவாகம் தொடர்பான அமைச்சின் கீழ் நிருவகிக்கப்பட்டது.

**கடமைப் பொறுப்புகள்**

இலங்கையில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என்ற வகையில் தாபிக்கப்பட்டுள்ள 341 உள்ளூர் அதிகார சபைகளின் மூலதன முதலீடுகளின் பொருட்டு தேவையான நீண்டகால நிதி வசதிகளை சலுகை வட்டி அடிப்படையில் வழங்குதல் அடிப்படை கடமைப்பொறுப்பாகும்.

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட இடம் | இலக்கம் 24/A, வோட் ப்ளேஸ், கொழும்பு 07 |
| தொலைபேசி | 011-2687514 |
| தொலைநகல் | 011-2691261 |
| மின்அஞ்சல் முகவரி | lldf1916@gmail.com |

**ஆணையாளர் சபையின் அமைப்பு**

1993ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்தில் 2 ஆம் இலக்கம் பிரகாரம் ஆணையாளர் சபை கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படும் ஆகக்குறைந்த 13 உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும்.

அ ) (தலைவர் - உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்

ஆ ) (நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் ஒருவர்

இ ) (ஒவ்வொரு மாகாண சபைகளிலும் ஆளுநர்களால் பெயரிடப்படும் 09 அரச அலுவலர்கள்

ஈ ) (கௌரவ அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் மூன்று பேர்கள்

| | |
|---|---|
| கணக்காய்வாளர்கள்: | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் |
| உள்ளக கணக்காய்வு: | உள்ளக கணக்காய்வுப் பிரிவு – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| வங்கிகள்: | இலங்கை வங்கி |

பணிற்றொகுதியினர்:

2015ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியத்தின் பணிற்றொகுதி பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| பிரதான நிறைவேற்று அலுவலர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (தொழிற்பாட்டு) | 01 |
| உதவி கணக்காளர் | 01 |
| அபிவிருத்தி அலுவலர் | 17 |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 |
| சாரதி | 02 |
| அலுவலக பணியாளர் | 02 |
| **மொத்தம்** | **33** |

## நிருவாக செயற்பாடு

நிறுவனத்தின் நிருவாக செயற்பாடு ஆணையாளர் சபைமூலம் நடைமுறைப்படும் இணைந்த செயற்பாடாக அறிமுகப்படுத்தலாம். நிருவாக முறையில் முக்கியமான அம்சமாக, நிறுவனத்தின் இணைந்த வெற்றி மற்றும் தொடர்ச்சியான பொருளாதார நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமையும். உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபை, இணைந்த நிருவாக செயற்பாட்டினை நடாத்திச் செல்வதன்மூலம் வியாபார ஒழுக்கநெறிகள், வெளிப்படைத் தன்மை மற்றும் உயர் பொறுப்பு நிலைமைகளை பேணிச் செல்வதற்கு பொறுப்பாக உள்ளது.

### ஆணையாளர் சபை

#### அமைப்பு

ஆணையாளர் சபையானது, தலைவர் அடங்கலாக பதினான்கு பேர்களை கொண்டமைந்துள்ளதுடன், அவர்களின் விசேட அறிவு மற்றும் அனுபவம் நிறுவனத்தின் வியாபார செயற்பாட்டுக்கு உபகாரமாக அமையும். ஆணையாளர் சபையின் உறுப்பினர்கள் எவரும் நிறுவனத்துடன், கொடுக்கல்வாங்கல்களுக்கு தொடர்பு படவில்லையென்பதுடன், அது அவர்களின் கடமைகளை நிறைவேற்றும்போது சுயாதீனத்தை பேணிச் செல்வதற்கு சாதகமாக அமைந்துள்ளது.

#### தீர்மானமெடுத்தல்

ஆணையாளர் சபையின் உறுப்பினர்கள் ஒரு மாதத்திற்கு ஒருமுறை கூடுவதுடன், அதன்போது அன்றாட நடவடிக்கைகள் ஆய்விற்கு உட்படுத்துவதுடன், மிகவிசேடமான கொள்கை முறையிலான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படும். மேலும் ஆணையாளர் சபை உறுப்பினர்களால் தாபனத்தின் குறிக்கோள்களை அண்மித்துக்கொள்வதற்கு ஏற்புடையதான உபாய வழிமுறைகளையும் தீர்மானிப்பார்கள்.

#### பொறுப்பு

1. தாபனத்தின் பலம், வினைத்திறமை மற்றும் கவனம் என்பவற்றை கருத்தில்கொண்டு வியாபார உபாய முறைகளை தயாரித்தல்
2. மேற்படி உபாய முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
3. தற்போதுள்ள முறைமையில் செயற்பாட்டுக்கு ஏற்புடையதாக இடர் முகாமைத்துவம், உள்ளக நிருவாகம், ஒழுக்க நெறிகள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களுக்கு ஒழுங்கமைவதற்கு பொறுப்பு கூறுதல்
4. மூலதன செலவுகளின் அவதானிப்புகள், மேற்பார்வையிடல் மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்
5. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் செயலாற்றுகை கண்காணிப்பு.
6. தகவல் முறைமை மற்றும் கணக்காய்வு செயற்பாட்டை பயனுள்ளவாறு நடைமுறைப்படுவதற்கு பொறுப்பாக இருத்தல்.

#### சுயாதீன தீர்ப்பு

ஆணையாளர் சபையின் செயற்பாடுகளின்போது ஒவ்வொரு ஆணையாளர்களும் தமது சுயாதீன கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன், ஏனைய தரப்புகளின் சட்ட விரோதமான தாக்கங்கள் அல்லது பாதகமான தாக்கங்களுக்கு உட்படுத்தலாகாது. உபாய முறைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளுதல், உபாய முறைகளை அமுல்படுத்தல், செயலாற்றுகையின் மீளாய்வு, வளங்களை விநியோகித்தல் மற்றும் வியாபார ஒழுக்க

நெறிமுறைகளை பேணுதல் போன்ற நடவடிக்கைகளின் பொருட்டு ஆணையாளர்களின் கவனம் கோருதல் வேண்டும்.

**தலைவர்**

தலைவர் அவர்களின் கடமைப்பொறுப்புகளை விபரமாக தெளிவுபடுத்தி பிரித்து காட்டப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் தாபன சட்டகத்தினுள் அதனால் அதிகார சமநிலைப்படுத்தல் உருவாகியுள்ளது. நபர்களின் தனி விருப்பம் பிரகாரம் தீர்மானமெடுக்கம் தன்மை வரையறுக்கப்பட்டுள்ளது.

**தலைமை அவர்களின் கடமைப்பொறுப்பு**

தலைவர் அவர்களின் தலைமைத்துவத்தின்கீழ் ஆணையாளர் சபை உரிய உபாயமுறைகளின் மீது வழிகாட்டலுடன், தொழில்சார் தன்மையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆணையாளர் சபை தொழில்சார் முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் தலைமைத்துவம் வழங்குவதற்கு அவருக்கு ஆற்றல் உள்ளது.

**ஆணையாளர் சபை நியமனம் செய்தல்**

ஆணையாளர் சபை நியமனம் செய்கின்ற நடைமுறைத் திட்டம் மிக தெளிவாக வெளிப்படைத்தன்மையுடன் உள்ளதுடன் அதை சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**கணக்காய்வு மற்றும் பொறுப்பு**

**தாபனத்தின் தன்மை மற்றும் எதிர்காலத்தை மதிப்பிடல்.**

தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் இந்த நிறுவனத்தின் எதிர்கால நோக்கத்தின்படி அரச துறையில் “சீ” வகுப்பின் நிறுவனமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, நிறுவனத்தின் பணிற்றொகுதியினரை மீளமைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி இரண்டு பிரதி பணிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சிறந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பேணிச் செல்லுதல் மற்றும் இடர் முகாமைத்துவம்**

ஆணையாளர்களால் அமுல்படுத்திய உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம்மூலம் நிறுவனத்தின் முதலீடுகளையும் சொத்துக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் நிலவும் உள்ளார்ந்த குறைபாடுகள் காரணமாக ஏற்படும் பிழைகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக ஆணைக்குழுச் சபையை அறிவுறுத்தப்பட்டுள்ளது

**உள்ளக நிருவாக முறைமைகளில் போதியளவு தன்மை மற்றும் பலன்தரும் தன்மை பற்றி முன்னராக மேற்கொண்ட புலனாய்வுகள்**

ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களால் மேற்கொண்ட புலனாய்வுகளை சார்ந்து உள்ளக நிருவாக முறைமைகளில் போதியளவு தன்மை மற்றும் பலன்தரும் தன்மை தொடர்பாக அவதானிப்புகளை கட்டுப்பாட்டுச் சபையிடம் அனுப்பி வைப்பதுடன், நிருவாகச் சபையால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**நிதி கூற்றுகளை அறிக்கையிடல்**

நிருவாகச் சபையின் ஆணையாளர்களால் நிறுவனத்தின் நிதி கூற்றுகளை இலங்கை நிதி அறிக்கையிடல் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தப்படுவதுடன், நிதி கூற்றுகளின் அறிக்கையிடல் தற்போதுள்ள கணக்கீட்டு தரநியமங்களுக்கு (SLFRS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தப்படுவதுடன், நிதி கூற்றுகளை அறிக்கையிடல் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நடைமுறை தன்மைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று நிதி கூற்றுகள் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படுகிறது.

**தொடர்ச்சியான தன்மை**

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் உரிய திரவத் தன்மையின்கீழ் அதன் வியாபார நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்கின்றது.

**நியதிச்சட்ட முறையிலான பிணைப்புகள்**

ஆணையாளர்களால் அவர்களின் அறிவு மற்றும் நம்பிக்கை என்பவற்றுக்கு அமைவாக அரசாங்கத்துடன் உள்ள நிதிசார் பிணைப்புகள் மற்றும் சட்டத்துடனான ஊழியர்களுடன் உள்ள பிணைப்புகளின் பொருட்டு உரிய செலுத்தல்களை மேற்கொண்டுள்ளமை அல்லது அது தொடர்பாக போதியவு ஒதுக்கீடுகள் நிறுவனத்தின் நிதி கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது தொடர்பாக திருப்தியடைகின்றது.

**ஏனைய தரப்புகளுடன் உள்ள தொடர்பு**

**ஊழியர்கள்**

நிருவாகச் சபையால் தயாரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் நோக்கு, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக நிறுவனத்தின் எல்லா அலுவலர்களும் அறிந்துள்ளனர். ஆகக் குறைந்த வயதெல்லைக்கு குறைவான எந்தவொரு நபருக்கும் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை. நிறுவனத்தின் வேலை வாய்ப்புகள் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கு இனம், பால்வேறுபாடு ஆகிய வேறுபாடுகள் கவனத்தறிகு உட்படுத்துவதில்லை.

**ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள்**

பொது திறைசேரி, சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் உள்நாட்டு வருமானத் திணைக்களம் என்பவற்றுடன் அர்த்தமுள்ள தொடர்பினை பேணுவதற்கு கட்டுப்பாட்டுச் சபை உறுதியளித்துள்ளது. நிறுவனத்தின் தன்மை மற்றும் செயற்பாடு என்பன சம்பந்தப்பட்ட

நிறுவனங்கள்மூலம் வழங்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை உரியவாறு பின்பற்றியதன்மூலமும் நாட்டில் நிலவும் சட்டங்களுக்கு இணங்கியதன்மூலமம் எய்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**சுற்றாடல்**

நிறுவனம் மற்றும் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட உடன்பாடுகளை உபயோகப்படுத்துவதன்மூலம் சுற்றாடல் முறைமையை உரியவாறு பேணிச்செல்லுதல் தொடர்பாக நிருவாகச் சபையால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் பகுப்பாய்வு

### 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குவதற்காக 200 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டுக்குள் 09 உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கிய மொத்த கடன் பெறுமதி 144.6 மில்லியன் ரூபாவாகும். உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குதல் சதவீதமாக மேற்கொள்ளும்போது 72 %ஆகும். இந்த கடன் தொகை சலுகை வட்டி அடிப்படையில் 5-10 ஆண்டுகளில் மீண்டும் செலுத்தப்படல் வேண்டும்.

2016 ஆண்டில் கடன் வழங்கியதன் சாராம்சம் பின்வருமாறாகும்.

| | கருத்திட்டங்களின் வகை | வட்டி வீதம் (வருடாந்தம்) | தொகை (ரூபா) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வீதிகளின் பேணல் அலகுகளை தாபித்தல் | 9.0% | 34,520,000 | 03 |
| 2 | தகனகூடங்களை நிருமாணித்தல் | 6.5% | 5,900,000 | 01 |
| 3 | பொதுச் சந்தையை நிருமாணித்தல் | 9.0% | 23,228,000 | 03 |
| 4 | கழிவு பொருட்களின் முகாமைத்துவ கருத்திட்டங்கள் | 6.5% | 50,000,000 | 01 |
| 5 | பொது நூலகங்களை நிருமாணித்தல் | 7.0% | 31,000,000 | 01 |
| | **மொத்தம்** | | **144,648,000** | **09** |

வருமானம்

உழைத்துக் கொள்ளப்பட்ட மொத்த வருமானம் 177 மில்லியன் ரூபாவாகும். (ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்கள்மூலம் வழங்கப்பட்ட கடன் தொகையும் அடங்கலாக) அதற்கு மேலதிகமாக அரச வங்கிகளில் சுழற்சி நிதியத்தில் முதலீடு செய்வதன்மூலம் 52.6 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிருவாக செலவுகள் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அளிப்புகளை ஒதுக்கிய பின்னர் தேறிய இலாபம் 94.1 மில்லியன் ரூபாவாகும். (புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட பகுதி 54 மில்லியன் ரூபாவாகும்.) மேலும் 2016 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட கடன் தீர்ப்பின் பெறுமதி 142 மில்லியன் ரூபாவாகும். அதனடிப்படையில் வரிக்கு முன்னரான இலாபம் 4.4 மில்லியன் ரூபாவாகும்.

2016 ஆம் ஆண்டில் வட்டி வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் பொது திறைசேரியிடம் வட்டி செலுத்தல் (கருத்திட்டங்களின் பிரகாரம்)

(ரூபா.மில)

| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 81.4 | 4.8 | 92.4 | 126.1 | 304.7 |
| பொது திறைசேரியிடம் வட்டி செலுத்தல் | 15.2 | 4.8 | 72.3 | 35.4 | 127.7 |

**2016 ஆம் ஆண்டில் முதலீட்டு வருமானம் பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.**

(ரூபா.மில)

| | LLDF | UDLIHP | LGIIP | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|
| பொது திறைசேரி உண்டியல்கள் | 1.2 | - | 1.8 | 3.0 |
| நிலையான வைப்புகளின் வட்டி | - | 1.3 | - | 1.3 |
| நிதியத்தின் முகாமைத்துவக் கணக்கு | 1.0 | 0.2 | 0.4 | 1.6 |
| REPO முதலீடுகள் | 17.7 | 7.0 | 21.9 | 46.6 |
| மொத்தம் | 19.9 | 8.5 | 24.1 | 52.5 |

**கடந்த 05 ஆண்டுகளில் மொத்த வருமானம்- 2012 - 2016**

(ரூபா.மில்லியன்)

| ஆண்டு | வரி செலுத்துவதற்கு முன்னர் மொத்த வருமானம் (ரூபா.மில்லியன்) |
|---|---|
| 2012 | (335.4) |
| 2013 | (246.4) |
| 2014 | (134.1) |
| 2015 | 5.1 |
| 2016 | 4.4 |

LLDF — உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்மூலம் வழங்கப்பட்ட கடன்

PCDP — பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை

UDLIHP — நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானக் கருத்திட்டம்

LGIIP — உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்

**திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்**

2016 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதியத்தின் பொருட்டு கடன் தவணைகள் மற்றும் வட்டி தொகை முறையாக 21.9 மில்லியன் ரூபா மற்றும் 15.2 மில்லியன் ரூபா பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடமைப்பு கருத்திட்டத்தின்கீழ் 74.1 மில்லியன் ரூபா கடன் தவணையாகவும், 72.3 மில்லியன் ரூபா வட்டியாகவும் பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் 1.7 மில்லியன் ரூபா கடன் தவணையாகவும், 35.4 மில்லியன் ரூபா பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு 3.9 மில்லியன் ரூபா கடன் தவணையாகவும், 4.8 மில்லியன் ரூபா வட்டியாகவும் மீள செலுத்தப்பட்டுள்ளது.

(ரூபா.மில்லியன்)

| | தவணை செலுத்தல் | வட்டி செலுத்தல் | மொத்தம் |
|---|---|---|---|
| **LLDF** | 21.9 | 15.2 | 37.1 |
| **PCDP** | 3.9 | 4.8 | 8.7 |
| **UDLIHP** | 74.1 | 72.3 | 146.4 |
| **LGIIP** | 1.7 | 35.4 | 37.1 |
| **மொத்தம்** | 101.6 | 127.7 | 229.3 |

**கடன் மீள அறவிடுதல்**

ஆண்டில் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் சுழற்சி நிதியத்திலிருந்து வழங்கிய கடன் தொகையில் கடன் தவணை தொகையாக 138 மில்லியன் ரூபாவும், வட்டி தொகையாக 75.3 மில்லியன் ரூபாவும் உள்ளூராட்சி நிறுவனங்களிடத்திலிருந்து மீண்டும் அறவிடப்பட்டுள்ளது. நகர அபவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற வீடமைப்பு கருத்திட்டங்களுள் 97.1 மில்லயின் ரூபா கடன் தவணையாகவும், 70.9 மில்லியன் ரூபா வட்டியாகவும், அறவிடப்பட்டுள்ளது. பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் ஊடாக 1.8 மில்லியன் ரூபா கடன் தவணையாகவும், 6.4 மில்லியன் ரூபா வட்டியாகவும் அறவிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் 126.9 மில்லியன் ரூபா தவணையாகவும், 108.6 மில்லியன் ரூபா வட்டியாகவும் மீள அறவிடப்பட்டுள்ளது.

(ரூ.மில்)

| | தவணை அறவிடுதல்கள் | வட்டி அறவிடுதல்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| **LLDF** | 138.0 | 75.3 | 213.3 |
| **PCDP** | 1.8 | 6.4 | 8.2 |
| **UDLIHP** | 97.1 | 70.9 | 168.0 |
| **LGIIP** | 126.9 | 108.6 | 235.5 |
| **மொத்தம்** | 363.8 | 261.2 | 625.0 |

## உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## 2016.12.31ஆந் திகதியில் கடன் வழங்குதல் சாராம்சம்

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | மாகாணம் | தொகை (ரூபா) | திண்ம கழிவு பொருட்களின் முகாமைத்துவ கருத்திட்டம் | தகனக் கூடங்களை நிருமாணித்தல் | வீதி அபிவிருத்திக்கு தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் | பொது வர்த்தக தொகுதிகளை நிருமாணித்தல் | பொது நூலகங்களை நிருமாணித்தல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | பிபில பிரதேச சபை | ஊவா | 4,539,000 | | | | 4,539,000 | |
| **2** | கோட்டே மாநகர சபை | மேல் மாகாணம் | 50,000,000 | 50,000,000 | | | | |
| **3** | சூரியவெவ பிரதேச சபை | தெற்கு | 15,600,000 | | | 15,600,000 | | |
| **4** | நீர்கொழும்பு மாநகர சபை | மேல் மாகாணம் | 31,000,000 | | | | | 31,000,000 |
| **5** | ஏறாவூர்பற்று பிரதேச சபை | கிழக்கு | 9,400,000 | | | 9,400,000 | | |
| **6** | தெஹியோவிட்ட பிரதேச சபை | சபரகமுவ | 7,689,000 | | | | 7,689,000 | |
| **7** | கோரளைபற்று வடக்கு பிரதேச சபை | கிழக்கு | 9,520,000 | | | 9,520,000 | | |
| **8** | கோட்டே மாநகர சபை | மேல் மகாாணம் | 11,000,000 | | | | 11,000,000 | |
| **9** | மஹியங்கனை பிரதேச சபை | ஊவா | 5,900,000 | | 5,900,000 | | | |
| | மொத்தம் | ஊவா | 144,648,000 | **50,000,000** | 5,900,000 | 34,520,000 | 23,228,000 | 31,000,000 |

**கடன் வழங்குதல்** - மாகாணங்களின் படி 2016 ஆண்டு

| மாகாணம் | தொகை (ரூபா) | சதவீதம் (ரூபா) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 92,000,000 | 64 |
| தெற்கு | 15,600,000 | 11 |
| சப்ரகமுவ | 7,689,000 | 05 |
| ஊவா | 10,439,000 | 07 |
| கிழக்கு | 18,920,000 | 13 |
| **மொத்தம்** | 144,648,000 | 100 |



கடன் வழங்குதல் -2016 ஆம் ஆண்டு
உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை படி

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | தொகை (ரூபா) | சதவீதம் (ரூபா) |
|---|---|---|
| மாநகர சபை | 92,000,000 | 64 |
| நகர சபை | - | - |
| பிரதேச சபை | 52,648,000 | 36 |
| மொத்தம் | 144,648,000 | 100 |



## உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் 2012 - 2016

| ஆண்டு | தவணை | | | | வட்டி | | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | LLDF | PCDP | UDLIHP | LGIIP | |
| 2012 | 22.9 | 1.26 | 109.6 | - | 21.8 | 7.6 | 90.8 | 29.0 | 283.0 |
| 2013 | 22.8 | 1.02 | 90.8 | - | 20.4 | 5.8 | 99.0 | 35.6 | 275.4 |
| 2014 | 22.5 | 3.80 | 90.8 | - | 18.6 | 5.2 | 100.0 | 35.0 | 275.9 |
| 2015 | 22.2 | 1.60 | 90.8 | - | 16.9 | 4.9 | 95.3 | 35.5 | 267.2 |
| 2016 | 21.9 | 3.90 | 74.1 | 1.7 | 15.2 | 4.8 | 72.3 | 35.4 | 229.3 |
| **மொத்தம்** | **112.3** | **11.58** | **456.1** | **1.7** | **92.9** | **28.3** | **457.4** | **170.5** | **1,330.80** |

ரூபா மில்லியன்

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் (LGIIP) வழங்கப்பட்ட கடன் தொகைக்கான சலுகை காலப் பகுதியில் வட்டி மட்டும் பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்படும்

| | |
|---|---|
| LLDF | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்மூலம் வழங்கிய கடன் தொகை |
| PCDP | பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை |
| UDLIHP | நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் வீடமைப்பு கருத்திட்டம் |
| LGIIP | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் |

**பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்**
**2012 – 2016**
உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**ரூபா.மில்லியன்**

| ஆண்டு | தவணை | வட்டி |
|---|---|---|
| 2012 | 22.9 | 21.8 |
| 2013 | 22.8 | 20.4 |
| 2014 | 22.5 | 18.6 |
| 2015 | 22.2 | 16.9 |
| 2016 | 21.9 | 15.2 |



## பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்
## 2012 –2016
பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டம் ( PCDP)

**ரூபா. மில்லியன்**

| ஆண்டு | தவணை | வட்டி |
|---|---|---|
| 2012 | 1.26 | 7.6 |
| 2013 | 1.02 | 5.8 |
| 2014 | 3.80 | 5.2 |
| 2015 | 1.60 | 4.9 |
| 2016 | 3.90 | 4.8 |



## பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் 2012–2016

## நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம் (UDLIHP)

ரூபா.மில்லியன்

| ஆண்டு | தவணை | வட்டி |
|---|---|---|
| 2012 | 109.6 | 90.8 |
| 2013 | 90.8 | 99.0 |
| 2014 | 90.8 | 100.0 |
| 2015 | 90.8 | 95.3 |
| 2016 | 74.1 | 72.3 |



## பொது திறைசேரியிடம் வட்டி செலுத்தல் 2012–2016
## உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் (LGIIP)

| ஆண்டு | தவணை செலுத்தல் | வட்டி செலுத்தல் |
|---|---|---|
| 2012 | - | 29.0 |
| 2013 | - | 35.6 |
| 2014 | - | 35.0 |
| 2015 | - | 35.5 |
| 2016 | 1.7 | 35.4 |



உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம
**செயலாற்றுகை 2012 – 2016**
(ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்திட்டங்கள் தவிர்ந்த)

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் | கடன் தவணை அறவிடுதல்கள் | கடன் வட்டி அறவிடுகள் |
|---|---|---|---|
| **2012** | 76,249 | 115,281 | 51,231 |
| **2013** | 225,479 | 124,086 | 54,394 |
| **2014** | 303,392 | 130,626 | 53,694 |
| **2015** | 292,589 | 126,671 | 75,639 |
| **2016** | 144,648 | 138,011 | 75,351 |




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| Loans Granted | 76,249 | 225,479 | 303,392 | 292,589 | 144,648 |
| Recovery Capital | 115,281 | 124,086 | 130,626 | 126,671 | 138,011 |
| Recovery Interest | 51,231 | 54,394 | 53,694 | 75,639 | 75,351 |

## ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் **1632 SRI (SF) - (UDLIHP)**
நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம்

நகர அபிவிருத்தி அமைச்சின்கீழ் நடைமுறைப்படுத்திய மேற்படி கருத்திட்டத்தின்கீழ் வழங்கிய கடன் மீள அறவிடும் நிறுவனமாக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் நடைமுறைப்படுகின்றது. இக் கருத்திட்டத்தின்கீழ் 27 உள்ளூராட்சி நிறுவனங்களின் பொருட்டு வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி 2,270 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டங்களுக்கிடையில் %70 கடன் அறவிடப்படுவதுடன், மீதி கருத்திட்டங்களின் கடன்களை மீள அறவிடுதலில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்கு பிரதான காரணம் யாதெனில், இக் கருத்திட்டத்தின்கீழ் நிருமாணிக்கப்படும் வர்த்தக தொகுதிகள் வெற்றியளிக்காமையும், ஏனைய சில கருத்திட்டங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளமையுமாகும்.

கடந்த 05 ஆண்டுகளுக்கு கடன் அறவிடல் முன்னேற்றம் (UDLIHP)

(ரூபா.மில்லியன்)

| ஆண்டு | கடன் தவணை அறவிடுதல் | வட்டி அறவிடுதல் |
|---|---|---|
| **2013** | 76.6 | 93.5 |
| **2013** | 82.4 | 90.3 |
| 2014 | 89.6 | 80.0 |
| 2015 | 94.7 | 69.4 |
| 2016 | 97.1 | 70.9 |

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் **2201 SRI (SF)**
உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2201 SRI (SF) கடன் இலக்கம் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குதல் மற்றும் அந்தக் கடனை மீண்டும் அறவிடும் பணி உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆசிய அபிவிருத்தி வங்கி, உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் என்பவற்றுக்கிடையில் கருத்திட்டங்களின் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. மேற்படி கருத்திட்டத்தின்கீழ் நகர உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை நகர சேவைகளை மேம்படுத்தல் மற்றும் விரிவான பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்கீழ் 05 பிரதான துறைகளை அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. கிராமிய நீர் வழங்கல்
2. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதி அபிவிருத்தி
3. திண்ம கழிவுபொருட்களின் முகாமைத்துவம்
4. நகர நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு முறைமை அபிவிருத்தி
5. சிறிய அளவிலான சமூக உட்கட்டமைப்பு வசதிகள் (அடிப்படை சுகாதார க்ளினிக் மற்றும் நூலகம் என்பன)

மேற்படி கருத்திட்டங்களை வழிநடாத்தப்படுவது, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுமூலமாவதுடன், உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குதல் மற்றும அந்தக் கடனை மீள அறவிடும் பணியை உள்நாட்டு கடன் மற்றும் அவிவிருத்தி நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை 42.5 அமெரிக்க மில்லியன் டொலராகும். இது %100 ஆன கடன் தொகையாக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறுவதுடன், 08 ஆண்டு சலுகை காலத்துடன் 32 ஆண்டுகளில் பொது திறைசேரியிடம் மீண்டும் செலுத்தப்படல் வேண்டும். சலுகை காலப் பகுதியில் வட்டி வீதம் %1ஆவதுடன், சலுகை காலத்தின் பின்னர் %1.5 ஆகும்.

இந்தக் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கப்படும் கருத்திட்டத்திற்காக கடன் மற்றும் அளிப்புகள் 02 பகுதிகளாகும். உள்ளூராட்சி நிறுவனங்களில் வகைப்படுத்தலின்படி கடன் தொகை %33 தொடக்கம் %53 வரையாவதுடன், அளிப்பு %40 தொடக்கம் %60 வரையாகும். மேற்படி அளிப்பானது செலவிட வேண்டியிருப்பது %9 ஆன வட்டி தொகையை கொண்டாகும். இதன் படி இந்தக் கருத்திட்டத்தின்கீழ் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் மிக பாரிய வருமுன் இழப்பு நிலையை வகிக்க வேண்டியுள்ளது.

உப கருத்திட்டங்களின் ஆற்றல் உள்ளூராட்சி நிறுவனங்களின் எதிர்கால வருமானங்களின்மீது தீர்மானிக்கப்படும். நிதி, உள்ளூராட்சி செயற்றிட்டம் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் அத்தியாவசிய அம்சங்களாவதுடன். அந்த அம்சங்கள் நடைமுறைப்படுவதன்மூலம் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் அறவிடப்படும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், கடன் தவறவிடும் வருமுன் இழப்பு நிலை குறைவாகும். அவ்வாறே கடன் மீள செலுத்தல் உரியவாறு நடைபெறுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களில் நிதி நிலைமை வலுவானதும் நின்று நிலைக்க கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அதே போல் நிதியத்திலிருந்து மீண்டும் கடன் பெற்றுக்கொள்வதற்காக குறித்த ஆற்றல் முக்கியமாகும். உள்ளூராட்சி வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்களின் நோக்கங்கள் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை
## 2016 ஆம் ஆண்டு

2010.12.14 ஆந் திகதிய அரச பொது முயற்சி சுற்றுநிருப பீ.ஈ.டீ./31 பிரகாரம் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று தரத்தில் அல்லாத இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அடங்கலாக மூன்று பேர்களைக் கொண்டு கணக்காய்வு குழு அமைந்துள்ளது. ஆணையாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியாளர், பொது திறைசேரி பிரதிநிதியாளர் அதன் தலைவராகவும், கணக்காய்வாளர் திணைக்களத்தின் பிரதிநிதியாளர் அவதானிப்பாளராகவும், பங்குபற்றுவார்கள். பிரதான நிறைவேற்று அலுவலர் அழைப்பாளராக பணியாற்றுவார்.

### (01) 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் நிதி கூற்றுகளை தயாரித்தல்

2012 மற்றும் 2015 ஆண்டுகளில் இறுதி கணக்குகள் இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, இலங்கை நிதிசார் அறிக்கையிடல் கணக்கு தரங்களுக்கு அமைவாக (SLFRS) தயாரிப்பதற்கு கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திடம் துரிதமாக சமர்ப்பிப்பதற்கு தேவையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

### (02) நிலுவை கடன் அறவிடுதல்

செயலற்ற நிலையில் உள்ள கடன் தொகை அறவிடுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு செலுத்த முடியுமான தவணை தொகைக்கு கடன் தொகையை மீளமைக்கப்பட்டு அறவிடுவதற்கும், மாகாண மட்டத்தில் சமர்ப்பித்து அதற்கு முன்னிலை வழங்கப்பட்டு கலந்துரையாடுவதற்கும் இல்லாவிட்டால் சட்டத்துடனான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணையாளர் சபையிடம் சமரப்பித்து பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

### (03) 2016 ஆம் ஆண்டில் இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம்

நிறுவனத்தின் 2015 -2020 காலப்பகுதிக்கு ஏற்புடையதாக இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் இற்றைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்.

### (04) கணினி மென்பொருள் முறைமை

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்ளும்போது உயர் முகாமைத்துவத்திற்கு மிகவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உண்மையானதும் சரியானதும் தகவல் முறைமையினை பேணிச் செல்லும் தேவையினை குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி தற்போதுள்ள முறைமையின் குறைப்பாடுகளை சரிசெய்துக்கொண்டு காலத்திற்கேற்றவாறு முறையான முறைமையொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல்.

### (05) வெற்றிடங்களை நிரப்புதல்

வெற்றிடம் நிலவுகின்ற பதவிகளின் பொருட்டு துரிதமாக பத்திரிக்கை அறிவிப்புகள்மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்

### 2016 ஆண்டின் குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| எச்.ரீ.கமல் பத்மசிறி | செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | தலைவர் |
| திரு..டப்.எம்.எம்.பீ.எச்.குணரத்ன | திறைசேரி பிரதிநிதித்துவம் | உறுப்பினர் |
| திரு.எஸ்.என்.ஆர்.சுபசிங்க | பிரதான நிறைவேற்று அலுவலர் - உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | உறுப்பினர் |
| திருமதி ஆர்.எம்.தர்மலதா | உள்ளக கணக்காய்வாளர் (உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு) | உறுப்பினர் |
| திருமதி யு.யு.பீ. பேரேரா | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் | அவதானிப்பாளர் |

# நிதிப்பாய்ச்சல் மற்றும் தகவல்கள்

PEF-059/2016

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | டபிள்யூஎன்பி2/சீபீ/எச்/ எல்எல்டீஎவ்/எவ்ஏ/2016 | |
| ඔබේ අංකය / உமது இல. / Your No. | | |
| දිනය / திகதி / Date | 2018 ஒக்தோபர் 09 | |

தலைவர்
உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிதியத்தின் தலைவருக்கு 2018 மே 18 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.4 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவரினால் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பிஈம/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ பொறுப்பின் உறுதிப்பாடு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டு பதிவேடுகளின் பேணுகை

நிதியம் அதன் கணக்கீட்டு பதிவேடுகளினை முறையாக பராமரித்திருக்கவில்லை. மேலும், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பேரேட்டுக் கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருக்காத அதேவேளை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டிய தேவையான அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் பேரேட்டுக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், கணக்காய்வில் பேரேட்டுக் கணக்குகளினூடாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளின் சரியானதன்மையை ஸ்தாபிப்பதற்கு சாத்தியக்கூறு காணப்படாதிருந்ததுடன்

3

நடைமுறைச் சொத்தின் கீழ் தொங்கல் கணக்கில் வரவு மீதியொன்றாக ரூபா 2,501,824 தொகையொன்றையும் தொங்கல் கணக்கில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் செலவு மீதியொன்றாக ரூபா 22,063,699 தொகையொன்றையும் உள்ளடக்குவதன் மூலம் நிதிநிலைமைக்கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

(i) நியமத்தின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 60 ஆம் பந்தியின் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டவாறு திரவத்தன்மைக்கமைய நிதிசார் நிறுவகமொன்றின் செயற்பாடுகளுக்கு சமமாக நிதியத்தின் செயற்பாடுகளாக, சொத்துக்கள்/ பொறுப்புக்கள் வகைப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் அவற்றின் மீது கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 61 ஆம் பந்தியின் பிரகாரம், அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் 12 மாதங்களினை விடக்குறைந்த காலப்பகுதி மற்றும் அறிக்கைக் காலப்பகுதியின் பின்னர் 12 மாதங்களுக்கு அதிகமான காலப்பகுதியாக வெளிப்படுத்தல் வேண்டும், அவ்வாறிருக்க உத்தியோகத்தர் கடன்பட்டோர், ஏனைய கடன்பட்டோர் மற்றும் திறைசேரியிடமிருந்து பெற்ற கடன்கள் தொடர்பில் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

காசுப்பாய்ச்சல் கூற்றின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிசார் நிறுவகங்களின் வட்டிக் கொடுப்பனவு மற்றும் பெறுவனவு அவர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளாக குறிப்பிட முடியுமாக இருந்த போதிலும், நிதியத்துடன் தொடர்புடைய ரூபா 155,603,616 தொகையான வட்டிகளின் செலுத்துகை மற்றும் ரூபா 305,633,906 தொகையான வட்டிகளின் பெறுவனவு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கையில் இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய பெறுமானத்தேய்வு ரூபா 3,270,293 பெறுமதியில் குறிப்பிடப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 3,776,138 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால், காசுப்பாய்ச்சல் கூற்று தொழிற்படு மூலதன மாறுபாடுகளினை சரிப்படுத்துவதற்கு முன்னர் ரூபா 505,845 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம், ரூபா 388,761,890 தொகைக்கு கடன்பட்டோர் குறைவடைந்த அதேசமயம், மூலதன வகை மாறுபாடுகளின் கீழ் அது ரூபா 399,363,835 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால், காசு உட்பாய்ச்சல் ரூபா 10,601,945 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) உள்ளூராட்சி சபைகளுக்கு - எல்ஜீஐஜபி (Grant given to LA - LGIIP) வழங்கப்பட்ட ரூபா 54,773,440 தொகையான மானியங்களின் நட்டக்கழிவு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலினை கணிப்பிடுகையில் வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சரிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம், ரூபா 72,318,793 தொகையாகக் காணப்பட்ட திறைசேரிக்கு செலுத்தவேண்டிய வட்டிக் கணக்கு அதிகரித்திருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாடு மூலதன மாறுபாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலொன்றாக அது குறிப்பிடப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 94,084,745 ஆன காசு வெளிப்பாய்ச்சலொன்றாக அது குறிப்பிடப்பட்டிருந்தது.

(vi) உள்ளூராட்சி சபைகளுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் கடன்பட்டோர்களினூடாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்த போதிலும்,

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 14,644,000 தொகையொன்று உள்ளுராட்சி சபைகளுக்கான கடன்களின் செலுத்துகையாக மீண்டும் காட்டப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய கணக்குக் கொண்டுவரப்பட்ட ரூபா 142,363,848 பெறுமதியான கடன் நட்டக்கழிவு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலினை கணிப்பிடுகையில் சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

நியமத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம் வரிச்செலவினம்/ பொறுப்பின் பிரதான துண்டங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் பெறுமாத்தேய்வானது அச்சொத்தானது பயன்பாட்டிற்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள போது ஆரம்பிக்கப்பட்டவேண்டிய போதிலும், அதனுடன் இணங்கியிராது, கொள்வனவு ஆண்டில் சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்படுவதில்லை என்ற விடயத்தினைக் குறிப்பிட்டு கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 73(அ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் அனைத்து வகையான சொத்துக்களுக்கும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைமை, பயன்படு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதங்கள் வெளிப்படுத்தப்படவேண்டிய போதிலும், கணனி, மென்பொருட்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட சொத்துக்களுக்கு பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைமை, பயன்படு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு விகிதங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 140(அ), 141(அ),(ஆ),(இ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம், ஆரம்ப மீதியிலிருந்து இறுதி மீதிவரை இணக்கமொன்றாக தேறிய நலன் பொறுப்பு (சொத்து), நடைமுறைச் சேவை கிரயம், வட்டி வருமானம் அல்லது செலவினம், தேறிய நலன் பொறுப்பின் (சொத்து) மீள் அளவிடுகை மற்றும் பிந்திய ஊழியர் நலன்கள் தொடர்பில் கடந்த சேவைக் கிரயம் போன்றவை வெளிப்படுத்தப்படவேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியொன்றில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் பேணப்பட்டிருந்ததுடன் இந்தக் கட்டிடத்துடனான காணி அரச தீர்மானமொன்றின் மீது பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஆணையாளரின் அலுவலகத்திற்கு பிரித்துக்கொடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டிடங்கின் கீழ் எவ்வித சட்டரீதியான உரிமைத்துவம் அல்லது தற்காலிக உரிமைத்துவம் மூலதனமயமாக்கப்பட்டுக் காணப்பட்டிராத மேற்குறித்த கட்டிடத்தின் புனர்நிர்மணத்திற்கு நிதியத்தினால் ரூபா 3,851,693 தொகையொன்று செலவிடப்பட்ட அதேவேலை, மேற்குறித்த சொத்துக்களினை பதிவளிப்பதற்கு எவ்வித கொள்கையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளாவாறான நிதி நிலைமைக்கூற்றில் மூலதன மானியங்கள் மீதியாக ரூபா 5,275,731 தொகையொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், வருமானமொன்றாக அதனை இனங்காண்பதற்கு இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான அடிப்படையொன்றின் கீழ் கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டுப் பிழை காரணமாக, 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 12,838,773

7

தொகையைக் காணப்பட்ட போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக்கூற்றின் குறிப்பு 01 இல் ரூபா 16,069,192 ஆகக் அது குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,203,419 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய தளபாடம் மற்றும் சொத்துக்களின் (Furniture and Fittings) வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 275,298 தொகையாகக் காணப்பட்ட அதேவேளை, கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் அது ரூபா 30,328 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டுடன் தொடர்புடைய பெறுமானத்தேய்வு ரூபா 244,970 இனால் மிகைத்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) எல்எல்டீஎவ் சொத்துக்கள் தர நவீனமயப்படுத்தலின் கீழ் (LLDF Modernization Assets) கணக்கிடப்பட்ட மடிக்கணனிகளின் (Laptops) கிரயம் கணனி வன்பொருள், மென்பொருள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், மேற்குறித்த சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 2,395,166 திரண்ட பெறுமானத்தேய்வு தொடர்புடைய பெறுமானத்தேய்வுக் கணக்கு ஏற்பாட்டிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறித்த சொத்துக்களின் பெறுமானத்தேய்விடத்தக்க பெறுமதியினை மிகைத்து ரூபா 198,041 தொகையொன்று பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் மிகைகள் மற்றும் சொத்துக்களின் தேறிய பெறுமதி அந்தத் தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் (REPO) முதலீட்டுப் பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் ரூபா 180,600,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வங்கி மீதியின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அது ரூபா 180,000,000 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, முதலீட்டுப் பெறுமதி ரூபா 600,000 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணையாளர் சபை முற்பணங்களாக ரூபா 329,400 தொகையொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக இந்த தொகை மீதி

கீழ்க்கொண்டு வரப்பட்டிருக்காமையினால், அந்தக்கணக்கின் மீதி அந்த தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை கணக்கிற்கான ஏற்பாட்டின் மீதி ரூபா 2,915,417 தொகையாகக் காணப்பட்ட போதிலும், அந்த மீதி 2016 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 4,609,931 ஆக மீதி கீழ்க்கொண்டு வரப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்வாறான பணிக்கொடை கணக்குக்கான ஏற்பாட்டின் மீதி ரூபா 1,694,514 இனால் மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

